# ஈழத்தில் இந்து இலக்கியங்கள்

## (பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை)

கலையரசி சின்னையா

கி. பி. பதினான்காம் நூற்றாண்டிலிருந்தே ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு தொடர்பான வரலாற்றுப் போக்கினை அடையாளம் காண முடிகிறது. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து ஈழத்தில் எழுந்துள்ள இலக்கியங்களை நோக்கின் அவற்றுள் இந்துசமய இலக்கியங்கள் பெரும்பான்மை இடத்தினைப் பெற்றுள்ளமையினை அறியலாம். சமூகத்தில், சமயத்தின் பங்கும் தேவையும் சிலகாலப்பகுதிகளிற் கூடியும், சிலகாலப்பகுதிகளிற் குறைந்தும் காணப்பட்டதற்கேற்ப சமய இலக்கியங்களும் சிலகாலப் பகுதிகளிற் கூடுதலாகவும் சிலகாலப்பகுதிகளிற் குறைவாகவும் தோற்றம் பெற்றுள்ளன. எனினும் இடையீடின்றிச் சமயம் இலக்கியப் பொருளாக இடம்பெற்றே வந்துள்ளது. இவ்வகையில் ஈழத்திலே பதினான்காம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தோற்றம் பெற்ற இந்து இலக்கியங்களை வரலாற்றொழுங்கில் காலப்பின்னணியுடன் எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஈழத்துப் பூதன்தேவனாருடன் தொடங்குவது மரபாகி விட்டதெனினும், முதலிற் கூறியதுபோல் ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய ஒரு தொடர்ச்சியான ஆதாரபூர்வமான வரலாற்றை, யாழ்ப்பாணம் தனி இராச்சியமாகத் தமிழ்மன்னர்களால் ஆளப்பட்ட காலமாகிய ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலிருந்தே அதிலும் சிறப்பாகப் பதினான்காம் நூற்றாண்டிலிருந்தே பெறமுடிகிறது. இதனால் இக்காலகட்டத்தில் இருந்தே ஈழத்தில் எழுந்த இந்து இலக்கியங்கள் பற்றியும் நாம் நோக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி நிலவிய காலத்திலே (1216–1619) சமயம், வரலாறு, சோதிடம், வைத்தியம் என்பனவற்றைப் பொருளாகக் கொண்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் சமயசம்பந்தமான இலக்கியங்களே அதிகமாகும். **தட்சிணகைலாசபுராணம், திருக்கரைசைப்புராணம், கதிரைமலைப்பள்ளு, கண்ணகிவழக்குரை** என்பன இக்காலப்பகுதியிலே தோன்றிய சமயசம்பந்தமான இலக்கியங்களாகும். இவற்றுள் தட்சிணகைலாசபுராணம், திருக்கரைசைப்புராணம், கதிரைமலைப்பள்ளு ஆகிய மூன்றும் ஈழத்தின் பழமைவாய்ந்த இந்துக் கோவில்களைப் போற்றியெழுந்த இலக்கியங்களாக அமைவது நோக்கத்தக்கது.

தட்சிணகைலாசபுராணம் ஈழத்தின் தொன்மை வாய்ந்த பாடல் பெற்ற தலமான கோணேஸ்வரத்தின் தோற்றவரலாற்றினையும், சிறப்பினையும் எடுத்துக் கூறுகிறது. வடமொழி மச்சேந்திய புராணத்தினைத் தழுவித் தட்சிணகைலாசபுராணம் பாடப்பட்டபோதும் இப்புராணத்தின் திருநகரச்சருக்கத்தில், ஈழநாட்டுடன் தொடர்பான செய்திகள் சிறப்பாகக்

குளக்கோட்டன் கோணேஸ்வரக் கோவிலுக்குச் செய்த பணிகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்புராணத்தை இயற்றியவர் யார் என்பது பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுகிறது.[1]

திருக்கரைசைப்புராணம், திருகோணமலைக்கு அண்மையிலுள்ள 'அகத்தியதாபனம்' என வழங்கப்படும் கரைசையம்பதியின் வரலாற்றைக் கூறி அங்கு எழுந்தருளியுள்ள சிவனைப் போற்றித் துதிக்கின்றது.

''ஆதியே போற்றி யரனேயடி போற்றி
சோதியே போற்றி சுடரேயடி போற்றி
பாதியே போற்றி பரனேயடி போற்றி
நீதகலுந் தென்கரைசைத் தேவேயடி போற்றி.''

எனச் சிவனைப் போற்றும் வகையிற் பூசைச் சுருக்கப் பாடல்கள் பல அமைந்துள்ளன. இப்புராணத்தை இயற்றியவர் யார் என்பது தெரியவில்லை. இந்நூலைப் பதிப்பித்த அகிலேசபிள்ளை, உமாபதிசிவாசாரியார் பரம்பரையில் வந்த ஒருவர் இதனைப் பாடியிருக்கலாம் என்ற கருத்து நிலவுவதாகக் கூறியுள்ளார்.[2]

கதிரமலைப்பள்ளு தென்னிலங்கையில் உள்ள கதிர்காமம் என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள முருகனைப் போற்றுகின்றது.

''தென்கதிரை வேலவர் திருநாமம் பாடலாம்
என்கதையை யெண்ணு ரிகழ்ந்து''

எனவரும் கதிரமலைப்பள்ளின் அவையடக்கச் செய்யுளடிகள் கதிரை வேலவர் புகழ் பாடவே இப்பள்ளு எழுந்தது என்பதனை அறியத்தருகின்றன. இப்பள்ளினை இயற்றியவரும் யார் என்பது தெரியவில்லை.

கண்ணகிவழக்குரை ஈழத்திலே செல்வாக்குப் பெற்ற கண்ணகி அம்மன் வழிபாட்டின் பின்னணியிலே தோற்றம் பெற்ற இலக்கியமாகும். சிலப்பதிகாரம் கண்ணகியைத் தெய்வமாக்கிப், பிறப்பிலிருந்தே தெய்வீகத் தன்மையினைக் கண்ணகிக்கு அளித்துள்ளது. சேரன் செங்குட்டுவன் சேரநாட்டில் கண்ணகிக்கு விழா எடுத்தபொழுது அங்கு கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் சென்றான் எனச் சிலப்பதிகாரத்திற் கூறப்படுகிறது. இக்கயவாகுவே ஈழத்தில் கண்ணகி வழிபாடு பரவக் காரணமாக விளங்கினான் என்பர். இவனால் ஈழத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகிவழிபாடு ஈழத்துத் தமிழ்மக்களிடையிலும் சிங்களமக்களிடையிலும் பெரும் செல்வாக்குப் பெற்றது. இவ்வாறு சாதாரண மக்களின் வழிபடு தெய்வமாக விளங்கிய கண்ணகி அம்மனைப் போற்றிய கண்ணகி வழக்குரை சாதாரண மக்களின் மதநம்பிக்கையினை வெளிக்காட்டுவதாகவும் அமைகின்றது.

இவ்விதம் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலத்திலே தோற்றம் பெற்ற சமய இலக்கியங்கள் இந்துமதச் சார்பானவையாக, அக்காலத்திலே சிறப்புப் பெற்று விளங்கிய வழிபடுதலங்களையும் தெய்வங்களையும் போற்று

வனவாக அமைந்துள்ளன. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலெழுந்த தட்சிணகைலாசபுராணம் போற்றிப் பாடிய கோணேஸ்வரத்தினை, போர்த்துக்கேயர் காலத்தில் வாழ்ந்த குவைறோஸ் (Queyroz) பாதிரியார் "கீழைத் தேசத்துக் கிறிஸ்தவர்கள் அல்லாதவரின் உரோமாபுரி"[3] எனக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து கோணேஸ்வரத்தின் சிறப்பினையும் அக்காலத்தில் சைவ சமயத்தவர் அதற்கு அளித்த முக்கியத்துவத்தினையும் உணரமுடிகிறது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே தோற்றம் பெற்ற இந்து இலக்கியங்கள் மூலம் அக்காலத்தில் அரசர்களும் மக்களும் சமய ஈடுபாடுடையவராக இருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. அச்சமய ஈடுபாடே இவ்விந்து இலக்கியங்களின் தோற்றத்திற்குப் பின்னணியாக அமைந்தது எனலாம். அத்துடன் யாழ்ப்பாணத்தவரின் தமிழகத் தொடர்பும் இவ்விலக்கியங்கள் எழுவதற்கு ஓரளவு காரணமாயிருந்திருக்கலாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சியை அடுத்து யாழ்ப்பாண இராச்சியம் அந்நியரான ஐரோப்பியரின் ஆளுகைக்குட்பட்டது. பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈழத்தின் தென்மேற்குப் பகுதியில் தமது ஆட்சியினை நிலைப் படுத்திய போர்த்துக்கேயர் 1621ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண இராச்சியத்தைத் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்து 1658 வரை ஆட்சி செய்தனர். போர்த்துக்கேயரின் ஆட்சியைத் தொடர்ந்து ஒல்லாந்தரின் ஆட்சி 1798 வரை நீடித்தது. இவர்களின் ஆட்சிக்காலத்தில் அதாவது பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிற் கிறிஸ்தவ சமயச் சார்பான இலக்கியங்கள் தோற்றம் பெறத் தொடங்கின. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தமது ஆட்சிக்காலத்திலே தமது மதத்தைப் பரப்புவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டனர். போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தினையும், ஒல்லாந்தர் இறப்பிறமாது என வழங்கப்படும் புரொட்டஸ்தாந்து மதத்தினையும் பரப்பினர். இக்கிறிஸ்தவப் பரம்பலினால் ஈழத்தின் சமயங்களான பௌத்தசமயமும் இந்துசமயமும் பாதிக்கப்பட்டன. தமது சமயத்தினைப் பரப்பிய போர்த்துக்கேயர் ஈழத்திலிருந்த பௌத்தவிகாரைகளையும் இந்துக்கோயில்களையும் இடித்தனர்.

> "சமய அலுவலிற் பறங்கியர் யாழ்ப்பாணத்தாரைத் துன்புறுத்தாவிடினும் நம்மவரின் மனதைத் திடீரெனப் புண்படச்செய்த வேறொரு கருமத்தை இழைத்துவிட்டார்கள். அது யாதெனில் இந்நாட்டில் ஆங்காங்கு விளங்கிய சைவசமய ஆலயங்களை ஒன்றும் விடாமல் இடிப்பித்தமையாம். ஒலிவேறு யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமான 500 சைவ ஆலயங்களை இடிப்பித்தான் என்றதை அவனுக்கோர் புகழ்ச்செய்தியாகப் பறங்கியர் எழுதி வைத்திருக்கின்றனர்"[4]

என யாழ்ப்பாண வைபவகௌமுதியில் கூறப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேயர் இக்கோவில்களை இடித்துச் சமயவளர்ச்சியைத் தடுக்க ஒல்லாந்தர், புரொட்டஸ்தாந்தவர் அல்லாத பிறமதத்தவர் பகிரங்கமாக வழிபாடு நடத்தக்கூடாது எனக் கட்டளை பிறப்பித்து ஏனைய சம

யங்களின் வளர்ச்சிக்குத் தடைபோட்டனர். இவற்றுடன் இவர்களின் ஆட்சிக்காலங்களில் வலோற்காரமான மதமாற்றங்களும் ஓரளவு நடைபெற்றுள்ளன.

> "ஒவ்வோர் புருஷர்க்கும் தங்கள் பேர்சூட்டினர்
> உயர் சிவபத்தி செய்யாது தடுத்தனர்
> சைவர்களானாலும் தொம்பிலிப் பென்றபேர்
> சொன்ன தறியாயோ ஞானப் பெண்ணே"[5]

என உத்தியோகலட்சணக்கும்பி ஆசிரியர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் செயலைக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தமது சமயத்தைப் பரப்புவதற்காகப் பிரசமயத்தவரைத் துன்புறுத்திய சூழ்நிலையில் ஈழத்துச் சைவத்தமிழ்ப் புலவர்கள் தமது சமயத்தைப் போற்றி இலக்கியங்களைப் படைப்பது கஷ்டமே. சுவாமி ஞானப்பிரகாசர், தில்லைநாதத்தம்பிரான் ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறித் தமிழகத்திற்குச் சென்றமை இதற்குச் சிறந்த சான்றாகும். இவர்களிருவரும் கிறிஸ்தவர்களின் கோவதைக்குப் பயந்து யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு சமயப்பணி புரிந்தார்கள் எனக் கூறுவர். இப்படியாகப் பலவிதத்திலும் கிறிஸ்தவப் பரம்பல் பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளில் ஈழத்தில் இந்து இலக்கிய வளர்ச்சிக்கு இடையூற்றினை ஏற்படுத்தியதெனினும், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்திலேயே இந்து இலக்கியங்களின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுபோல் தெரிகின்றது. போர்த்துக்கேயர் காலப் பகுதியில் எழுந்தனவாக இன்று எமக்குக் கிடைக்கும் இலக்கியங்கள் கத்தோலிக்க மதச்சார்பான இலக்கியங்களாகவே உள்ளன. "அக்காலம் யாழ்ப்பாண நாடெங்கும் பெயரளவில் கிறிஸ்தவ நாடாக இருந்தமையால் கிறிஸ்தவ சமயநூல்களே இயற்றப்பட்டன"[6] என யாழ்ப்பாணவைபவ கௌமுதி ஆசிரியரும் இதனைக் கூறியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

போர்த்துக்கேயர் காலத்தைப் போலல்லாது ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவ சமயசார்பான இலக்கியங்களுடன் இந்து இலக்கியங்களும் அதிகளவிலே தோற்றம் பெற்றுள்ளன. இதனுல் போர்த்துக்கேயர் காலத்திலும் பார்க்க ஒல்லாந்தர் காலத்தில் சைவசமயத்தை வளர்க்கத்தக்க அமைதியான சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் நிலவியது எனக் கருதமுடிகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் இடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமிகோவில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியிலே திரும்பக் கட்டப்பட்டமையும், வேறு பல இந்துக்கோயில்கள் அக்காலத்திலே தோற்றம் பெற்றமையும் இக்கருத்தை மேலும் வலுப்படுத்துகின்றன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் எழுந்த இந்துசமயம் சார்பான இலக்கியங்களைத் தலங்களைப் போற்றியெழுந்த இலக்கியங்கள், விரதங்களின் சிறப்பினைக் கூறும் இலக்கியங்கள் என இருவகைப்படுத்தி நோக்கலாம்.

கணபதிஐயரின் **வட்டுநகர் பத்திரகாளியம்மை பதிகம், வட்டுநகர் பத்திரகாளியம்மை ஊஞ்சல்**, சின்னத்தம்பிப் புலவரின் **மறைசைஅந்தாதி, கல்வ**

ளையந்தாதி, பருளைவிநாயகர்பள்ளு, வரதபண்டிதரின் கண்ணியவலை குருநாதசுவாமி பிள்ளைவிடுதூது, கணேசவிற்கோட்ட விநாயகர் ஊஞ்சல், இணுவை சின்னத்தம்பிப்புலவரின் இணுவை சிவகாமியம்மை பதிகம், சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், மயில்வாகனப்புலவரின் புலியூர்யமகஅந்தாதி, வீரக்கோன் முதலியாரின் வெருகற்சித்திரவேலாயுதர் காதல், சுதுமலைப் புலவன் விநாயகரின் கதிரமலைக் குறவஞ்சி, காரைதீவு மே. சுப்பையரின் நல்லைநாயகநான் மணிமாலை, கூழங்கைத் தம்பிரானின் நல்லைக்கலிவெண்பா என்பன ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இந்துத் தலங்களைப் போற்றியெழுந்த இலக்கியங்களாகும். ஈழத்துத் தலங்களுடன் தமிழ்நாட்டுத் தலங்களும் போற்றப்பட்டமையை மறைசையந்தாதி, புலியூரந்தாதி என்பன காட்டுகின்றன. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களிலே சைவக்கோவில்களுக்கு ஏற்பட்ட அழிவையும் சைவசமயத்திற்கு ஏற்பட்ட தீங்கையும் கண்ட, ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் புலவர்கள் தலங்களைப் போற்றி மக்களிடையே சமயப்பற்றை ஏற்படுத்தவே இவ்விலக்கியங்களைப் பாடியிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் விஜயநகர நாயக்கமன்னர் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமியப் படையெடுப்பினாற் கோவில்கள் அழியும் நிலையேற்பட்டபொழுது தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தலபுராணங்கள் தோற்றம் பெற்றமையைக் காண்கிறோம். ஈழத்திலும் அப்படியான ஒரு சூழ்நிலையிலே அதாவது போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் இந்துக்கோவில்களுக்கு அழிவு ஏற்பட்டநிலையிலே இத்தகைய தலசம்பந்தமான பிரபந்தங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த வரதபண்டிதர் இயற்றிய சிவராத்திரிபுராணம், ஏகாதசிப்புராணம், பிள்ளையார்கதை என்பன இந்துக்களாற் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படும் சிவராத்திரி, ஏகாதசி, விநாயக சஷ்டி என்னும் விரதங்களின் சிறப்பினைக் கூறுகின்றன.

சிவராத்திரிவிரதமே சிவனுக்குரிய விரதங்களுள் சிறப்பானதாகும். சிவராத்திரி விரதச்சிறப்பு சிவபுராணம், கந்தபுராணம், இலிங்கபுராணம், மகாபுராணம், ஆகிய நூல்களிற் கூறப்படுகிறது. இவற்றைவிடத் தமிழ்நாட்டிற் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த மறைஞானசம்பந்தர் மகாசிவராத்திரிகற்பம், மாதசிவராத்திரிகற்பம், சோமவார சிவராத்திரிகற்பம் என்னும் நூல்களைச் சிவராத்திரிவிரதச் சிறப்பினை விளக்க எழுதியுள்ளார். வரதபண்டிதர் இயற்றிய சிவராத்திரிபுராணம் சிவராத்திரி விரதத்தின் தோற்றம், அதனை நோற்கும்விதம், அவ்விரதத்தாற் பலன் பெற்றவர்களின் வரலாறு என்பனவற்றை மிகவும் விரிவாகக் கூறுகிறது. இத்தன்மையினாலேயே சிவராத்திரி விரதத்தினைப் பற்றிய விரிவான ஒரு நூலைச் சுன்னாகம் வரதபண்டிதரே முதலில் இயற்றியுள்ளார் எனலாம்.

ஏகாதசி விரதம் திருமாலுக்குரிய விரதமாகும். ஈழத்திலே சைவ வைஷ்ணவ வேறுபாடு பாராட்டப்படாமையினால் யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் ஏகாதசி விரதத்தைப் போற்றி அனுஷ்டிக்கின்றனர். ஏகாதசி விரதத்தின் சிறப்பு அக்கினிபுராணம், நாரதபுராணம், மகாபாரதம் என்பனவற்றிற் கூறப்படுகிறது. எனினும் வரதபண்டிதர் இயற்றிய ஏகாதசி புராணமே ஏகாதசி விரதம் பற்றிய கருத்துக்களைச் சிறப்பாக விரதகாலம்,

நோற்கும்விதம், அதனுல் ஏற்படக்கூடியபலன், பலனடைந்தோர் வரலாறு என்பனவற்றை மிகவும் விரிவாகக் கூறுகின்றது.

பிள்ளையார்கதை விநாயகசஷ்டி விரதத்தின் சிறப்பினை விரித்துரைக்கிறது. இங்கும் பலநூல்களிற் கூறப்பட்ட கருத்துக்களை வரதபண்டிதர் தொகுத்துக்கூறி விநாயகசஷ்டி விரதத்தின் சிறப்பினை முழுமையாக அறியத் தந்துள்ளார்.

''செந்தமிழ் முனிவன் செப்பிய காதையும்
சுந்த புராணம் கதையிலுள் ளதுவும்
இலிங்க புராணத் திருந்தநற் கதையும்
உபதேசகாண்டத் துரைத்தநற் கதையுந்
தேர்ந்தெடுத் தொன்றுயத் திரட்டியைங் கரற்கு
வாய்ந்த நல்விரத மான்மியம் முரைத்தான்''

என்பது பிள்ளையார் கதைச் சிறப்புப்பாயிரம். வரதபண்டிதர் இயற்றிய விரதசம்பந்தமான இம்மூன்று நூல்களையும் பார்க்குமிடத்து வரதபண்டிதர் சிவராத்திரி, ஏகாதசி, விநாயர் சஷ்டி என்னும் விரதங்கள் பற்றித் தமக்கு முன்னர் கூறப்பட்ட செய்திகள் அனைத்தையும் தொகுத்து அவ்வவ் விரதங்களின் சிறப்பினை உணர்த்தி அதன்மூலம் மக்களிடையே சமய பக்தியினை வளர்க்க முனைந்திருக்கின்ருர் என எண்ணத் தோன்றுகிறது. இன்றும் விநாயகசஷ்டி விரதநாட்களில், விநாயகராலயங்களில் வரதபண்டிதரின் பிள்ளையார்கதை படிக்கப்பட்டு வருகின்றது.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்திற்கு முன்னர் தோன்றிய இந்து இலக்கியங்களிலே சமயபிரசாரத்தன்மை - அதாவது தமது சமயமே சிறந்தது என மக்களுக்கு உணர்த்தும் தன்மை - இல்லை. அதற்கான தேவையும் அப்பொழுது இருக்கவில்லை. ஆனல் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலப்பகுதியில் எழுந்த சமய இலக்கியங்கள் சிலவற்றில் பிரசாரத்தன்மை ஓரளவு காணப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்தில் ஞானப்பள்ளினை இயற்றிய ஆசிரியர், பள்ளின் கதைப்போக்குக்கு முக்கியத்துவம் கொடுக்காது சமய போதனைக்கே முக்கியத்துவம் கொடுத்தார். ஞானப்பள்ளின் கதையோடு தொடர்பற்ற வகையில் இருபத்தொன்பது அறிவுறுத்தற் பாடல்கள் கவிக்கூற்ருக இடம்பெற்றுள்ளன. அப்பாடல்கள் சமயபிரசாரப் பாடல்களாகவே கொள்ளத்தக்கன. இந்த அளவு அதிகமாக இக்கால இந்து இலக்கியங்களிற் பிரசாரத் தன்மை இடம்பெறவில்லையெனினும், ஓரளவு பிரசாரப்பண்பு சில இந்து இலக்கியங்களிற் காணப்படுகின்றது என்பதனை மறுக்கமுடியாது. சின்னத்தம்பிப்புலவரின் மறைசைஅந்தாதி, கல்வளையந்தாதி என்பவற்றிலும் வரதபண்டிதரின் விரதசம்பந்தமான இலக்கியங்களிலும் இப்பண்பினைக்காணலாம். ஞானப்பள்ளின் ஆசிரியர் யேசுபெருமானின் பெருமையினை மக்களுக்குக்கூறி மக்களைத் தமது சமயத்தின்பாற்படுத்த முனைந்தார்.

''என்று மின்றுநீதி ரித்துவ ஏகமா
யெவ்வு யிர்க்குமி ரக்கமுண் டாகியே
நின்று லாவநெ டுவானம் பூதமும்
நிறுத்தி யாட்கொள்ளும் நீதிசொ ரூபனை

அன்று மின்றும் னுதிதா னுயிய
ஆதி கர்த்தனை யஞ்சலித் தீர்களாய்ச்
சென்று மோக்கிச வீடடை வீர்களே
திருட்டி யார்கண்டு தேறுஞ் சனங்களே'' 7

என்னும் பாடல் உதாரணமாக நோக்கத்தக்கது. இத்தன்மையினை

''அறுத்தவித் தாரச் சமைத்தபின் கைக்குகந்தார் பொதியக்
குறுத்தவித் தாரமுனிக்குகள் கோலக் குமரராய்
பொறுத்தவித் தாரணி யேத்தா ரணபுரம் போந்துகரு
வறுத்தவித் தாக்கும் தல்லாது வேறு மருந்தில் லையே'' 8

எனவரும் மறைசையந்தாதிப் பாடலிலும் காண்கிறோம். வெவ்வேறு பட்ட சமயங்கள் சமூகத்திலே நமது செல்வாக்கினை நிலைநாட்ட முனையும் பொழுது இலக்கியங்களிலும் அப்பண்பு பிரதிபலிப்பது தவிர்க்க முடியாத தாகும். பதினேழாம், பதினெட்டாம் நூற்றுண்டுகளில் எழுந்த சமய இலக்கியங்களில் இடம்பெற்ற சமயப்பிரசாரப் பண்பின் வளர்ச்சி நிலையில் ஏற்படக்கூடிய சமய மோதலை பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோற் றம் பெற்ற சமய இலக்கியங்களிற் காண்கிறோம்.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சியினை அடுத்து ஈழத்தில் ஆங்கிலே யர் ஆட்சி நிலவிய பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்து இலக்கியங்கள் பரவலாகவும் பலவகையினவாகவும் தோற்றம் பெற்றன. வழிபடுதலங்களை யும், தலமுறை தெய்வங்களையும் போற்றும் செய்யுளிலக்கியங்களுடன் சைவசமயத்தின் உண்மைப்பொருளை, சைவக்கிரியைகளை எல்லாம் வசன நடையில் விளக்கும் இலக்கியங்களும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் எழுந்துள்ளன. இந்து இலக்கியங்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டில் இவ் விதம் வளர்ச்சியடைய அந்தக்காலப் பின்னணியும் அப்பின்னணியிற் செயற்பட்ட நாவலரது இயக்கமுமே காரணமாக அமைந்தன.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆட்சி செலுத்திய ஆங்கிலேயர், ஒல் லாந்தரைப் போலல்லாது ஈழத்திலே பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் மதச்சுதந்திரத்தையும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் அளித்தனர். அத்துடன் கிறிஸ்தவ சமயத்தையும் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டனர். ஆங்கி லேயர் காலத்தில் ஈழத்திற்கு வந்த வெஸ்லியன்மிஷன், சேர்ச்மிஷன், அமெரிக்கமிஷன் முதலியவற்றைச் சேர்ந்த பாதிரிமார் கிறிஸ்தவ மதப் பிரசாரத்திலும் மதமாற்ற முயற்சிகளிலும் மிகத் தீவிரமாகச் செயற்பட் டனர். இவர்கள் மதமாற்றத்திற்கு ஆங்கிலக்கல்வியைக் கருவியாகப் பயன்படுத்தினர். கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சின்படி தலைமைப்பதவி தவிர்ந்த ஏனைய பதவிகளை ஆங்கிலம் கற்ற இலங்கை யருக்குக் கொடுக்கலாம் என்ற நிலை உருவாகியதனல், உத்தியோகத்திற்கு ஆங்கிலக்கல்வியின் இன்றியமையாமையினையும் தேவையினையும் உணர்ந்த யாழ்ப்பாணத்தவர் பலர் கிறிஸ்தவக் கல்லூரிகளை நாடினர். இதனல் கிறிஸ்தவ மதமாற்றமும் பரவலாக நடைபெற்றது. கிறிஸ்தவப் பாதிரி மாரின் இச்சூழ்ச்சியினை நாவலர் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார்.

> "பாதிரிமார்கள் பள்ளிக்கூடங்களைத் தாபித்து இக்காலத்திலே சீவனத்திற்குப் பெரும்பாலும் வேண்டும் பாஷையாகிய இங்கிலிஷைப் படிப்பிப்பாராயினார்கள். பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடத்தில் இளமைப் பருவத்திலே கற்கப் புகுந்தவர்கள் அநேகர் சைவ சமயத்துண்மையை அறியாமையினாலே கிறிஸ்துமதத்திற் பிரவேசித்துவிட்டார்கள்"[9]

> "அந்தப் புன்மதத்தை இங்குள்ளாரொருவரும் அங்கீகரியாமையை அறிந்து, ஒரு சூழ்ச்சி செய்துகொண்டு, இக்காலத்தில் சீவனத்திற்குப் பெரும்பாலும் வேண்டும் பாஷையாகிய இங்கிலிஷைப் படிப்பித்தும் ஒவ்வொரு நியோக வியாசத்தாற் பொருள் கொடுத்தும் சற்புத்தியுஞ் சமய பத்தியுமில்லாத ஏழைச் சனங்களைத் தங்கள் வசமாக்கினார்கள்"[10]

எனும் கருத்துக்கள் நோக்கத்தக்கன.

கிறிஸ்தவ பாடசாலைகளிற் சேர்ந்த சைவப்பிள்ளைகள் கட்டாய மத மாற்றத்திற்குட்பட்டமையினை நாவலரின் பின்வரும் கூற்றுக்களால் அறியலாம்.

> "இத்தேசத்திலுள்ள பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற சைவசமயப் பிள்ளைகளை விபூதி அழிக்கும் பொருட்டு வலாற்காரம் பண்ணுகிறார்கள். விபூதியழிக்க உடன்படாத பிள்ளைகளை வித்தியாசாலையினின்று நீக்கிவிடுகிறார்கள். கிறிஸ்துசமயப் புத்தகங்களையும் சைவ தூஷண புத்தகங்களையுமே நெடுநேரம் படிப்பிக்கின்றார்கள். ஞாயிற்றுக்கிழமையிலே தங்கள் பிரசங்கம் கேட்க வராத பிள்ளைகளையும் சைவசமயத் திருநாட்களிலே சைவசமயக் கோவில்களுக்குப் போகும் பிள்ளைகளையும் தண்டிக்கிறார்கள்"[11]

பாடசாலைகளை அமைத்து ஆங்கிலக்கல்வியைக் கருவியாகக் கொண்டு கிறிஸ்தவ சமயத்தினைப் பரப்பிய பாதிரிமார் அச்சுக்கூடங்களை நிறுவி சமயப் பிரசாரத்திற்காக நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டனர். அவற்றிலே தமது சமயத்தின் கொள்கைகளையும், உண்மைகளையும் விளக்கியதுடன் சைவசமயத்தின் உண்மைகளை, கடவுளரை, வழிபாட்டு முறைகளைத் தூஷித்தும் எழுதினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திற்கு வந்த பாதிரிமார்களின் இத்தகைய நடவடிக்கைகளால் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலங்களிலும் பார்க்க ஆங்கிலேயர் காலத்திற் சைவசமயம் பெரும் பாதிப்பினையும் வீழ்ச்சியினையும் அடையும் நிலை உருவாகியது. இதனைப் பண்டிதமணியின் பின்வரும் கூற்று நன்முறையில் விளக்குகிறது.

> "பறங்கியர் ஒல்லாந்தர் காலத்திலே சைவ சமயத்திற்கு வந்த வருத்தம் சிரங்கு வருத்தம் போன்றது. அது வெளித் தோல் வருத்தம். உள்ளூரச் சமயம் உயிரைப்பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்தில் சமயத்திற்கு வந்த வருத்தம் க்ஷயவருத்தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத்தம் அது. உட்பகையான வருத்தம். புறப்பகையிலும் உட்பகை பொல்லாதது"[12]

கிறிஸ்தவப் பாதிரிமாரினால் கிறிஸ்தவ மதமாற்றம் பரவலாக்கப்பட்டும், சைவசமய உண்மைகள், வழிபாட்டுமுறைகள் என்பன பழித்துரைக்கப்பட்டும் சைவசமயம் நலிவுற்றபொழுது சைவத்தின் காவலராகக் கருதப்பட்ட சைவகுருமார்கள் சைவத்தைக் காக்கவோ அதன் கொள்கைகளை விளக்கவோ எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதனை வன்மையாகக் கண்டித்த[13] நாவலர் தாமே அப்பணியினை மேற்கொண்டார். சைவப் பாடசாலைகளை அமைத்துச் சைவக்கல்வியை நடைமுறைப் படுத்தியும், கோவில்களிற் சமயப்பிரசங்கஞ் செய்தும் சமய அறிவை மக்களிடம் வளர்த்துச் சைவத்தைப் பாதுகாக்க முயற்சித்ததுடன், அச்சுக்கூடத்தினை நிறுவிச் சமயநூல்களைப் பதிப்பித்தும் சைவசமய உண்மைப்பொருள்களை விளக்கும் நூல்களை வசனத்தில் எழுதியும் வெளியிட்டார். சைவசமயத்தின் உண்மைப்பொருளை அறியாது வேதசிவாகம நெறிக்கு மாறாக வாழ்ந்த சைவமக்களுக்கு சைவஅறிவினை ஊட்டவேண்டிய தேவையும் சைவசமயத்தின் உண்மைகளையும் வழிபாட்டு முறைகளையும் தூஷித்துத் திருத்த கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்குச் சைவத்தின் சிறப்பினை உணர்த்த வேண்டிய கடமையும் நாவலருக்கு இருந்தமையினால் அவற்றை உணர்ந்து நாவலர் தமது சைவ இலக்கியப் பணியை ஆற்றினார். நாவலரின் வழியைப் பின்பற்றி அவர் காலத்தில் வாழ்ந்த சங்கரபண்டிதர், சி. வை. தாமோதரம்பிள்ளை, நா. கதிரவேற்பிள்ளை, வல்வை வயித்திலிங்கம்பிள்ளை முதலானோரும் சைவ இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க வசன இலக்கியங்களையும் உரைநூல்களையும் எழுதினார்கள். இவர்களைவிடப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவத்தமிழ்ப் புலவர்கள் பலர் நாவலரின் சமய இயக்கத்தினால் உந்தப்பட்டு இந்துத்தலங்களைப் போற்றும் பெருந்தொகையான செய்யுளிலக்கியங்களை இயற்றினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திலே தோற்றம் பெற்ற இந்து இலக்கியங்களைச் செய்யுளிலக்கியங்கள், வசன இலக்கியங்கள் என வகைப்படுத்தலாம். செய்யுளிலக்கியங்கள் முன்னைய காலப்பகுதியிலே தோன்றிய இந்து இலக்கியங்களைப்போன்று இந்துத் தலங்களையும், தலமுறை தெய்வங்களையும் போற்றுவனவாகவே காணப்படுகின்றன. சேனாதிராச முதலியார், சந்திரசேகரபண்டிதர், பீதாம்பரப்புலவர், விசுவநாத சாஸ்திரியார், கந்தப்பிள்ளை, வைத்தியநாதச் செட்டியார், சரவணமுத்துப் புலவர், முத்துக்குமார கவிராசர், உடுப்பிட்டி குமாரசாமி முதலியார், சின்னத்தம்பி, சதாசிவபண்டிதர், கார்த்திகேயப்புலவர், முருகேச பண்டிதர், சபாபதிநாவலர், சிவசம்புப்புலவர், அ. குமாரசாமிப்புலவர் முதலானவர்கள் இந்துத்தலங்கள் பலவற்றைப் போற்றிப் பல பிரபந்தங்களையும் பாடியுள்ளனர். அவையனைத்தையும் இங்கு எடுத்துக்கூறுவது சாத்தியமன்று. பொதுவாகக் கூறின் நல்லூர், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் முதலான தலங்களின்பேரிலே அதிக இலக்கியங்கள் எழுந்துள்ளன எனலாம். நல்லைவெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி, நல்லைக்கந்தசுவாமி பிள்ளைவிடுதூது, நல்லைக் கலித்துறை, நல்லைக்கந்தர் அகவல், நல்லைக்கந்தர் கீர்த்தனை, திருகோணமலை அந்தாதி, திருகோணமலைக் குறவஞ்சி, நகுலமலைக்குறவஞ்சி, மாவையந்தாதி என்பன அவற்றுட் குறிப்பிடத்தக்க சிலவாகும். ஈழத்துத்தலங்களுடன் தமிழ்நாட்டுத்தலங்களும் இக்காலத்தில் ஈழத்துப் புலவர்களாற் போற்றப்பட்டமைக்குச் சான்றாக மறைசைக்கலம்பகம், மறைசைத்திருப்புகழ், சிதம்பரசபா

**நாதபுராணம், திருவிடைமருதூர் பதிற்றுப்பத்தந்தாதி** முதலானவை விளங்குகின்றன.

வசனத்தில் எழுதப்பட்ட இந்து இலக்கியங்கள் சைவசமய உண்மைகளை விளக்குவனவாகவும், சைவக்கிரியைகள் வழிபாட்டு முறைகள் என்பன பற்றிக் கூறுவனவாகவும், சைவ சாதனங்களைப் போற்றுவனவாகவும், சைவ தூஷணத்தை மறுத்துரைப்பனவாகவும் பலவகையில் அமைந்துள்ளன.

கிறிஸ்தவத்துக்கு எதிராக சைவத்தை வளர்க்கும் நோக்குடன் சமயப் பணியில் ஈடுபட்ட நாவலருக்கு சைவசமய உண்மைகளைச் சைவ மக்களுக்கு அறிவுறுத்த வேண்டிய தேவையிருந்தது என்பது முன்னர் கூறப்பட்டது. அதனை நாவலரும் அவர் வழியிற் செயற்பட்டவர்களும் நன்கு உணர்ந்திருந்தனர்.

> ''நீங்கள் உங்களுடைய சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும் ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும் அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும் சிவபெருமானை வழிபடும் முறைமையையும் அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகிறீர்களில்லை''[14]

> ''இந்நாளரசபாஷை இங்கிலிஷேயாகச் சீவனோபாய நிமித்தம் கல்வி கற்போரெல்லாம் அப்பாஷையையே கற்றலாலும் அறிவினிமித்தம் கல்வி கற்போரும் கலைஞான சாஸ்திராதிகளைச் சுதேச பாஷையிற் கற்றுக்கொடுக்கும் கல்லூரிகளின்மை காரணமாக அப்பாஷையையே கற்றலானும் சமஸ்கிருத திராவிடங்கற்று சைவசித்தாந்த நூல்களை வாசித்தறிந்தோர் சிலரன்றியிலர்; ஆகவே பெரும்பான்மையோர் சைவத்தின் கொள்கையையும் அதன் மகிமையையும் அறியாது அஞ்ஞானந்தகாரத்திற் சமய அறிவு மழுங்கிக் கிடக்கின்றனர்''[15]

என்று கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அவ்வுணர்வின் வெளிப்பாடாக அமைந்தனவே. இத்தகைய நிலையினாலேயே சைவமக்கள் விளங்கிக் கொள்ளத்தக்க விதத்தில் சைவசமய உண்மைகளை வசனநடையில் விளக்கும் நூல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்றன. ஆறுமுக நாவலரின் **சைவவினாவிடை**, சங்கரபண்டிதரின் **சைவப்பிரகாசனம், சற்பிரசங்கம்**, நா. கதிரவேற்பிள்ளையின் **சைவசித்தாந்தச்சருக்கம், சிவஷேத்திராலய மகோற்சவ உண்மைவிளக்கம்** என்பன சைவசமய உண்மைகளை விளக்கும் நூல்களாகும்.

**சைவவினாவிடை**, வினாவும் விடையுமாகச் சமய உண்மைகளைப் படிப்போர் இலகுவாக உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில் விளக்குகிறது. பதியியல், பாசவியல், வேதாகமவியல், சைவபேதவியல், விபூதியியல், உருத்திராக்கவியல், பஞ்சாஷரவியல், சிவலிங்கவியல் முதலான பல இயல்களாக அமைத்துச் சைவ உண்மைகளையும் சைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளையும் நாவலர் சைவவினாவிடையிற் கூறியுள்ளார். இவ்விதம் வினா

விடையாகச் சைவ உண்மைகளை விளக்கும் முறையை நாவலரே முதலிற் கையாண்டுள்ளார். **சைவப்பிரகாசனம்** வேத சிவாகமங்களின் ஞான காண்டப் பகுதியிற் கூறப்பட்ட கருத்துக்களை மிகவும் சுருக்கிக் கூறுகிறது. இதிலே தர்க்கபிரமாண இயல்புகள் சாதி நிருபணம், சமய நிருபணம் என்பனவற்றுடன் முப்பொருள் இலக்கணமும் கூறப்பட்டுள்ளது. சற்பிரசங்கம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்பினை விளக்குகின்றது. **சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம்** ஆலயங்களின் அமைப்பு, அங்கு நடைபெறும் உற்சவங்கள் என்பனவற்றின் தத்துவத்தினை மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறுகிறது. ஆலயங்களின் அமைப்பு முறைகளதும், அங்கு நடக்கும் உற்சவங்களதும் உண்மைப்பொருளை அறியாதவர்கள் அவற்றைப் பயனற்றன எனப் பழித்துப் புறக்கணித்து நடப்பதுண்டு.

> ''தலம் ஆலயம் மூர்த்தி தீர்த்தங்களெல்லாம் சோதனையிற் பார்க்குமிடத்து அவைகள் சாதாரணமாக மண், கல், மரம், உலோகம் நீர் போலிருப்பனவன்றி வேறு விசேடமொன்றினையு முடையனவன்றே எனவும் அவைகள் வேடிக்கை விஷயமாக பொழுது போக்கற்காக ஏற்படுத்தப்பட்டனவன்றி வேறொரு பிரயோசனத்தையும் கொடுக்கமாட்டா எனவும் கூறித் தலம், கோயில், குளம், உற்சவம் என்னும் பயனிலாச் செய்கைகள் வேண்டாமென்று தாமொழிவதோடு பிறரையும் கெடுக்கின்றுர்கள்''[16]

என அந்நிலையை விளக்கிய சுதிரவேற்பிள்ளை சிவாலயங்களின் அமைப்பின் தத்துவத்தினையும் அங்கு நடக்கும் உற்சவங்களின் தத்துவத்தினையும் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தே சிவாலய மகோற்சவ விளக்கத்தினை எழுதினர்.

சைவசமயத்தின் உண்மைப்பொருளை அறியாதிருந்த சைவமக்கள், சைவக்கிரியைகள், வழிபாட்டு முறைகள் என்பனவற்றையும் அறியாதிருந்தமையினுற் பிழையானவழியில் வழிபாடுகளையும் கிரியைகளையும் மேற்கொண்டனர். இவற்றைக் கண்டித்த[17] நாவலர் வேத சிவாகம நெறிக்கமைவான வழிபாட்டுமுறைகள் கிரியைகள்பற்றி மக்கள் இலகுவாக அறிந்துகொள்வதற்காக **சிவாலயதரிசனவிதி, சிவபூசாவிதி, நித்திய கருமவிதி, அனுட்டானவிதி, பிராத்தவிதி, போசனவிதி, தருப்பணவிதி** முதலான நூல்களை எழுதினர். சிவாலயதரிசனவிதி சிவாலயங்களை வழிபடும் முறைபற்றிச் சைவசமயநெறி, உபதேசகாண்டம், அருணகிரிப்புராணம், சிவதருமோத்தரம், கடம்பவனபுராணம், சேதுபுராணம், அஞ்சுமான் என்னும் ஆகமம், காலோதராகமம் என்பனவற்றிலே செய்யுள் நடையிற் கூறப்பட்ட கருத்துக்களை எல்லாம் தொகுத்து வசனத்திலே தருவதாக அமைந்துள்ளது. சங்கரபண்டிதரும் **அநுட்டானவிதி** என்ற நூலை எழுதியுள்ளார்.

கிறிஸ்தவர்கள் சைவசமயத்தைத் தூஷித்தபொழுது சைவசாதனங்களாகிய விபூதி உருத்திராக்கம் என்பனவற்றைப் பழித்துச் சிவசின்ன தூஷணமும் செய்தனர்.

> "கிறிஸ்தவர்கள் 'மாட்டுச்சாம்பர் பாவத்தைப் போக்குமா' என்றும், 'இலந்தைக்காய் போன்ற உருத்திராக்கக்காய்கள் மோஷத்தைக் கொடுக்குமா' என்றும், உங்கள் ஞானிகளாகிய பட்டினத்தடிகள் முதலாயினோரே 'நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன' என்றின்னன போன்ற வாக்கியங்களாற் பிரயோசனமில்லை யென்றுங் கூறியிருக்கின்றனர் என்றும் நம்மவர்களை மருட்டித் திரிக்கின்றனர்"[18]

எனக் கதிரவேற்பிள்ளை கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. கிறிஸ்தவர்களுடன் வைஷ்ணவர்களும் சிவசின்ன தூஷணஞ் செய்தனர் என்றும் கதிரவேற்பிள்ளை கூறுகின்றார்.[19] இதனால் சைவசாதனங்களாகிய விபூதி, உருத்திராக்கம் என்பவற்றின் சிறப்பினை விளக்குவதற்காகவே கதிரவேற்பிள்ளை **சைவபூஷணசந்திரிகையை** எழுதினார் எனக் கூறலாம். இந்நூலில் விபூதி, உருத்திராக்கம் இரண்டினதும் சிறப்பும் இலக்கணமும் அவற்றைத் தரிக்கும் முறையும் அவற்றினால் ஏற்படக்கூடிய பலன் களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அத்துடன் சிவசின்ன தூஷணஞ் செய்த கிறிஸ்தவர்கள், வைஷ்ணவர்கள் ஆகியோரின் கருத்துக்களை அவர வர்களின் சமயநூல்களில் இருந்து பிரமாணங்களைக் காட்டிக் கண்டித்துள் ளமையினையும் சைவபூஷணசந்திரிகையிற் காணலாம்.[20]

நாவலருடைய **சைவதூஷணபரிகாரம்** சி. வை. தாமோதரம்பிள்ளையின் **சைவமகத்துவம்** என்னும் இரு நூல்களும் கிறிஸ்தவர்கள் சைவசமயக் கொள்கைகளுக்கும், வழிபாட்டு முறைகளுக்கும் எதிராகக் கூறிய கருத்துக் களைக் கண்டித்துச் சைவத்தின் பெருமையை நிலைநிறுத்துகின்றன. இந் நூல்களிற் சைவசமயக் கருத்துக்களும், கிறிஸ்தவசமயக் கருத்துக்களும் ஒன்றாக எடுத்து விளக்கப்பட்டு அதன்மூலம் சைவத்தின் பெருமை நிலை நாட்டப்படும் பண்பைக் காணமுடிகிறது. இந்நோக்கிலேயே இவ்விருநூல் களையும் நாவலரும் தாமோதரம்பிள்ளையும் எழுதியுள்ளனர் என்பதனை அவர்கள் கூற்றினாலேயே நாம் அறிந்துகொள்ளலாம்.

> "சிவதூஷணம் முதலிய பாவங்களைச் செய்யும் அஞ்ஞானிகளாகிய பாதிரிகளைக் கண்டித்தலும் அவர்களுடைய புன்மதமாகிய கிறிஸ்து சமயத்தைப் பலபெரு நியாயங்களினால் நிராகரித்தலும் சற்சமயமாகிய நமது சமயத்தை அதிபிரபலப் பிரமாணங்களினாலே ஸ்தாபித்தலும் மிக அவசியமாகச் செய்யவேண்டிய உயர்வொப்பில்லாத சிவபுண் ணியங்களாம்"[21]

என நாவலரும்

> "சைவசித்தாந்தத்தை யுறுத்தி அதற்கெதிரே கிறிஸ்து சமயத்தை நிறுத்தி அதன் மாட்சியும் இதன்றாழ்ச்சியு முணர்த்துவான் தொ டங்கி அவ்விரு சமயத்துள்ளும் கூறப்பட்டன வெல்லா மொன்றொன் றாகப் பார்க்கில் வரைகடந்து பெருகி அளவுக்கு மிஞ்சிய அமிழ்த மென்ன நஞ்சாய்ப் பயன்படாதாதலின் ஒருபானை சோற்றுக்கோர் அரிசி பதம் பார்த்தாற்போல விசேடித்த சில போதகங்களையே சீர் தூக்கி இயன்றமட்டும் சுருக்கமாகக் காட்டுவான் புகுந்து இரு கட்சி

யினருக்கு மொருங்கொத்துச் சந்திக்க ஓர் பொதுநிலைக்களன் வேண்டு மாதலின் ஈண்டுப் பொதுப் பிரகரணங்கூறி எச்சமய மெய்ச்சமய மென்று ஸ்தாபிப்ப தெவ்வாற்ருனென்பது முதலிலே யுணர்த்துத லுதலிற்று''[22]

எனத் தாமோதரம்பிள்ளையும் தமது நூல்களின் நோக்கத்தினை அறியத் தந்துள்ளனர். இத்தன்மையிற் சைவதூஷண மறுப்பாகத் தோற்றம் பெற்ற இவ்வகை நூல்களிற் பிறமத கண்டனம் வன்மையாக இடம் பெறுவதும் தவிர்க்க இயலாத பண்பாகிறது. நாவலரின் சைவதூஷணபரிகாரமும் தாமோதரம்பிள்ளையின் சைவமகத்துவமும் கிறிஸ்தவமதத்தை வன்மையாகத் தாக்கியமையாலேதான் இவற்றிற்கெதிராகப் பல கண்டன நூல்கள் எழுந்தன. சைவதூஷண பரிகாரத்திற்கு எதிர்ப்பாக சைவமகத்துவதூஷண பரிகாரநிராகரணம் அல்லது சுப்பிரதீபம் என்ற நூலும் சைவமகத்துவத்திற்கு எதிர்ப்பாக சைவமகத்துவதிமிரபானு, சைவமகத்துவ நிக்காரம் முதலான கண்டன நூல்களும் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை பார்த்த இலக்கியங்களைவிடச் சிதம்பரமான்மியம், சுப்பிரமணியபராக்கிரமம், சிவகர்ணுமிர்தம் என்பனவும் வசனத்தில் எழுதப்பட்ட இந்து இலக்கியங்களாக உள்ளன. ஆறுமுகநாவலரின் சிதம்பரமான்மியம் தலபுராணங்களின் தன்மையிலே சிதம்பரத்தின் சிறப்பினைக் கூறுகிறது. கதிரவேற்பிள்ளையின் சுப்பிரமணிய பராக்கிரமம் முருகனின் பெருமையினை விளக்குகிறது. சபாபதி நாவலரின் சிவகர்ணுமிதம் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பாகும்.

பத்தொன்பதாம் நூற்ருண்டு இந்து இலக்கியங்களின் வரிசையிற் சைவமூல நூல்களாகக் கருதப்படுவன சில வசனத்திற் சுருக்கமாக எழுதப்பட்டமையினையும், சைவநூல்களுக்கு உரைகள் எழுதப்பட்டமையினையும் குறிப்பிடவேண்டும். ஆறுமுகநாவலர் சைவசமய அறிவை மக்களுக்குப் பரப்புவதற்காகச் செய்த முயற்சிகளிற் சைவமூலநூல்கள் எனக் கருதப்படும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்பனவற்றை வசனத்தில் எழுதியமையும் ஒன்ருக அமைகிறது. நாவலரால் எழுதப்பட்ட அந்நூல்கள் பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் என வெளிவந்துள்ளன.

சைவமூலநூல்கள் சிலவற்றை வசனத்தில் எழுதி வெளியிட்ட நாவலர் சைவசமய நூல்கள் சிலவற்றுக்கு உரைகளையும் எழுதினர். சைவசமயநெறியுரை, சிவதருமோத்தரவுரை, கோயிற்புராணவுரை, திருச்செந்திநிரோட்டயமக அந்தாதியுரை, மருதூரந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை என்பன நாவலரால் எழுதப்பட்டன. நாவலரைப்பின்பற்றி வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, நா. கதிரவேற்பிள்ளை, வல்வை வயித்திலிங்கம்பிள்ளை என்போர் சமயநூல்களுக்கு உரை எழுதினர். பொன்னம்பலபிள்ளை மயூரகிரிப்புராணத்திற்கும், நா. கதிரவேற்பிள்ளை கூர்மபுராணம், பழனித்தல புராணம், திருவநுணைக்கலம்பகம், சிவராத்திரிப்புராணம் என்பனவற்றிற்கும், வல்வை வயித்திலிங்கம்பிள்ளை கந்தபுராணம் அண்டகோசப்படலம், தெய்வயானைதிருமணப்படலம், வள்ளியம்மை திருமணப்படலம் என்பனவற்றுடன் கந்தரலங்காரத்திற்கும் உரை செய்துள்ளனர். காலத்தின்

தேவைக்கேற்ப சைவசமயத்தின் உண்மைப்பொருளை விளக்க இத்தகைய உரைகளையும் இக்கால இலக்கிய ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ளமையை இவ் வுரைகள் வாயிலாகவே அறிந்துகொள்ளலாம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் சைவ சமயவளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையிற் பத்திரிகைகளும் சில தோன்றியுள்ளன. **சைவசுக்குமார்த்தபோதினி, சைவ உதயபானு, சைவாபிமானி** என்பன இக்காலத்தில் எழுந்த இந்துப் பத்திரிகைகளாகும்.

இவ்விதமாகப் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நாவலரின் சமயப் பாதுகாப்பு இயக்கத்தின் செயற்பாட்டினுல் இந்து இலக்கியங்கள் பலவகை யாகத் தோற்றம் பெற்றன. இதனுல் ஈழத்து இந்து இலக்கியவளர்ச் சியிற் பத்தொன்பதாம் நூற்றுண்டு மிகமுக்கியமான இடத்தைப் பெறு கின்றது என்பது தெளிவாகும். தொடர்ந்து இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த, நாவலர் வழிவந்த சிலர் சமய இலக்கியங்களை எழுதி இந்து இலக்கிய வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். அவர்களுள் காசி வாசிசெந்திநாதையர், த. கைலாசபிள்ளை, ச. சபாரத்தின முதலியார், சோமசுந்தரப்புலவர், சு. சிவபாதசுந்தரம், அச்சுவேலி குமாரசாமிக் குருக் கள் என்போர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இருபதாம் நூற்றுண் டிலே சமய சம்பந்தமான இலக்கியங்களைப் படைத்த இவர்கள் தம் முன் ளேர் வழியிற் சென்றதுடன் அமையாது சற்று ஆழமான முறையிலே சமயதத்துவங்களில் ஆய்வுகளை மேற்கொண்டும் இந்து இலக்கியத்தை வளம்படுத்தியுள்ளனர். காசிவாசி செந்திநாதையர் முதலானேரின் ஆக்கங் களை விரிவாக நோக்கின் இவ்வுண்மை புலனுகும்.

---

## அடிக்குறிப்புகள்

1. நடராசா F. X. C., ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு, கொழும்பு, 1970. பக் 91-99.
2. திருக்கரைசைப் புராணம் மூலமும், அ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையும். மயிலிட்டி விகிர்தி ஹு ஆனி மீ. இதில் 'வரலாறு' என்ற பகுதியில் இக்கருத்துக் கூறப்பட்டுள்ளது.
3. Queyroz. The Temporal and Spiritual conquest of Ceylon. ed, by S. G. Perera. Book I Colombo 1930. p. 226.
4. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாணவைபவகௌமுதி. வயாவிளான், ஜயசிறிசாரதா பிடேந்திரசாலை, 1918. பக். 82.
5. துரை, எம். எஸ்., உத்தியோக லக்ஷணக்கும்பி, 2ஆம் பதிப்பு. கொக்குவில், சோதிடப்பிரகாச யந்திரசாலை, 1937. பாடல் 26, பக். 8.
6. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாணவைபவகௌமுதி, பக். 89.
7. ஆ. சதாசிவம்., ஞானப்பள்ளு, அரசுவெளியீடு 1968. பாடல் 12 பக். 9.
8. சின்னத்தம்பிப்புலவர்., மறைசையந்தாதி, யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை, 1939. பாடல் 20 பக். 11.
9. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு முதற்பாகம். மூன்றும் பதிப்பு, சென்னை வித்தியாநுபாலனயந்திரசாலை, 1954. பக். 32-33.
10. சைவதூஷண பரிகாரம். இரண்டாம் பதிப்பு, துன்மதி சித்திரை, பக். 4.
11. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு. பக். 42.
12. கணபதிப்பிள்ளை, சி., 'உண்மை நாவலர்' மரகதம். தை, 1962.
13. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு யாழ்ப்பாணச் சமயநிலை என்ற கட்டுரையிற் சைவசமய குருமாரின் போக்கினை நாவலர் கண்டித்து எழுதியுள்ளார். பக். 62–69.
14. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு. பக். 60.
15. தாமோதரம்பிள்ளை, சி. வை., சைவமகத்துவம், சென்னை, வர்த்தமான தசங்கினி அச்சுக்கூடம், பிரபவ ஹு பக். 8 - 9.
16. கதிரவேற்பிள்ளை, நா., சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் சென்னை, வித்தியாநுபாலன அச்சகம், 1957. பக். 59.
17. நாவலரின் யாழ்ப்பாணச் சமயநிலை, 'நல்லூர் கந்தசுவாமிகோவில்' என்னும் கட்டுரைகளில் இவை கண்டிக்கப்பட்டுள்ளன.
18. கதிரவேற்பிள்ளை, நா., சைவபூஷணசந்திரிகை. 2ஆம் பதிப்பு, சென்னை. வித்தியாநுபாலன அச்சகம், 1957. பக். 34.
19. மேற்படி பக். 59.
20. மேற்படி பக். 34–38, 59 - 65.
21. சைவதூஷண பரிகாரம். பக். 10.
22. சைவமகத்துவம். பக். 10 - 11.